**தலைப்பு - 166 நீர் வழங்கல் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வழங்கல் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர் வழங்கல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன்

இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 10.1 பந்தின் கீழான நிதிக் கூற்றுக்களினை தயாரித்தல் தொடர்பான வழிக்காட்டல் இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி ஆண்டு இறுதியில் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய அல்லது திறைச்சேரியிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதிகள் மற்றும் காசுப் புத்தகத்தின் பிரகாரம் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய பெறுமதி கட்டாயமாக வேறு பெறுமதி எடுப்பதினால் அம் மீதிகள் இணைக்கப்படுவதற்கு முற்பண இணக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண இணக்க கணக்கு இறுதி கணக்குடன் முன்வைக்காமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் பின்னர் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் பிரகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டது. | 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் முற்பண இணக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும். |

## 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டினுள் கையகப்படுத்திக் கொண்ட மூலதன சொத்துக்களின் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 443,308 ஆகவிருப்பினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் (ஏசீஏ – 6 மாதிரி) அது ரூபா 303,010 ஆகவிருத்தல் காரணத்தினால் ரூபா 140,298 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையகப்படுத்தப்பட்ட மூலதன சொத்துக்களின் பெறுமதி தொடர்புடைய அட்டவனையுடன் சரியாக இணக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திறைச்சேரி இறுதி கணக்கு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் திறைச்சேரி கட்டுநிதி பெறல் ரூபா 2,019,711,521 ஆவிருப்பினும் அமைச்சின் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது 163,958,578 அதிகமாக ரூபா 2,183,670,099 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் முதல் 08 மாதங்களினுள் வீட்டு அமைச்சுடன் தொடர்பு கொண்டு இருந்தமையினால் முற்பணம் அவ் அமைச்சிற்கு பெறப்பட்டதுடன் இறுதி காலாண்டில் மட்டும் நீர்வழங்கல் அமைச்சிற்கு முற்பணம் பெறப்பட்டது. | 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | அமைச்சினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரமான ரூபா 2,505,627,219 ஆன ஏனைய பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,505,627,219 ஆன வருமானம் சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அடையாளப்படுத்தப்பட்ட வருமான சேர்த்தல் ACA 3 ஊடாக பிரநிதித்துவப்படுத்தியுள்ளது. | -மேற்கூறப்பட்டவாறு- |

## 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைச்சேரியின் இறுதி கணக்கு அறிக்கையின் பிரகாரம் நிதியல்லாச் சொத்தின் கீழ் அடையாளப்படுத்தப்பட வேண்டிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,074,113,966 ஆக காணப்படினும் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அது ரூபா 1,690,663,840 குறைவாக ரூபா 383,450,126 என காண்பிக்கப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஒதுக்க பெறுமதியும் அப் பெறுமதியினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆணடினுள் 166 தலைப்பின் கீழ் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் 2020 ஆகஸ்ட் இன் பின்னர் அமைச்சு பிரிந்ததினால் உயர் கல்வி அமைச்சிற்கு சொந்தமான நிலையான சொத்து அந் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டது. | 2020 ஒக்தோம்பர் 09 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 பந்தியின் பிரகாரம் நிதியல்லாச் சொத்து பெறுமதி திறைச்சேரி கணக்கு அறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திறைச்சேரியின் இறுதி கணக்கு அறிக்கையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இற்கு தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 2,378,366 ஆக காணப்படினும் அது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், வேறு அமைச்சீனூடாக கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அம்மீதி 2020 திசெம்பர் 31 இல் திறைச்சேரிக்கு | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள விடயம் சரியானதாகும். | 2020 ஒக்தோம்பர் 10 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டல் இல 06 இன் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

தீர்க்கப்பட்டிருப்பினும் அது நிகழ்நிலை மீதியாக காணப்படுகிறமையினால் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாச் சொத்தின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமனானவை என அடையாளப்படுத்தப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன .

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கான ஏழு வருமான குறியீடுகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த ரூபா 2,505,627,219 ஆன வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,505,627,219 ஆன வருமானம் சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அடையாளப்படுத்தப்பட்ட வருமான சேர்த்தல்கள் ACA 3 ஊடாக பிரதிநிதித்துவப்பட்டுள்ளது. | 2020 ஒக்தோம்பர் 10 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டல் இல 06 இன் 7(vi) அம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் கட்டுநிதி பெறுகை என ரூபா 2,183,670,099 காண்பிக்கப்பட்டிருப்பினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கட்டுநிதி பெறுகைகள் ரூபா 2,176,192,738 ஆக காணப்படிவதினால் ரூபா | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் வேறுபாடு அவதானிக்கப்படவில்லை. | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | 7,477,361 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் ஊழியர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினம், மானிய மாற்றல்கள், ஏனைய செலவு விடயங்களுக்காக ஏற்கப்பட்ட செலவினம் மற்றும் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி என்ற உறுப்படிக்காக காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி மற்றும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் காண்பிக்கப்பட வேண்டிய பெறுமதி இடையில் கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 4,532,317,064 ஆன வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சரியாக கணக்கிடப்பட்டுள்ளது. | - மேற்கூறப்பட்டவாறு- |
| (ஈ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் முற்பணம் அறவிடலாக ரூபா 5,843,298 காண்பிக்கப்பட்டிருப்பினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 3,592,517 ஆக காணப்பட்டதினால் ரூபா 2,250,781 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரியாக கணக்கிடப்பட்டுள்ளது. | மேற்கூறப்பட்டவாறு- |
| (உ) | முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்து நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்வதற்காக | பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் பெறுமதி காண்பிக்கப்படும் போது மூலதன சொத்துக்கள் | மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் முற்பணம் கொடுப்பதற்காக முறையாக ரூபா 1,849,937,553 மற்றும் ரூபா 8,564,602 செலவிடப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறாயினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் முற்பணம் செலுத்தலுக்காக ரூபா 443,308 மற்றும் 4,110,979 மட்டும் ஏற்கப்பட்டிருந்தக் காரணத்தினால் முறையாக ரூபா 1,849,494,245 மற்றும் ரூபா 4,453,623 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு செய்வதற்காக ஏற்கப்பட்டிருந்த செலவினங்களும் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது.<br>முற்பணம் செலுத்தலாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது ஆண்டினுள் அச உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கடன் மற்றும் முற்பணங்களுக்காக ஏற்கப்பட்டிருந்த பெறுமதியாகும் | |
| (**ஊ**) | காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்பு பெறுவனவுகளாக ரூபா 52,900,868 மற்றும் காசு செலுத்தல்களின் கீழ் வைப்பு செலுத்தல்களாக ரூபா 244,631,232 அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும் கணக்காயவிற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 8,096,590 மற்றும் வைப்பு செலுத்தல்கள் ரூபா 17,356,836 ஆக காணப்பட்டதினால் முறையாக ரூபா 44,804,278 மற்றும் 227,274,396 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வைப்பு பெறுவனவு மற்றும் வைப்பு செலுத்தல் தகவல்கள் ஏசீஏ 4 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் வைப்பு பேரேடு மற்றும் சிகாஸ் கணக்கின் ஊடாகவும் மீதி பரிசோதிக்கப்பட்டு உறுதி செய்துக்கொள்ள முடியும். | மேற்கூறப்பட்டவாறு- |

## 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

----------------------------------------------------------------------

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ---------------------------- | ------------- |
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியேதகத்தர்களுக்கு தெரியப்படுத்தி பிணை வைப்பிற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 753(2) இன் பிரகாரம் களஞ்சியசாலைக்கு பொருட்கள் கையேற்கும் போது பற்றுச்சீட்டு கட்டளை படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியசாலைக்கு பொருட்கள் கையேற்கும் போது தொடர்புடைய பதிவேட்டிற்குரிய இலக்கம் மற்றும் பக்க எண் குறிக்கப்பட்டு களஞ்சியசாலை பொறுபதிகாரியின் கையொப்பம் மற்றும் திகதி இடப்படுவதோடு தொடர்புடைய பதிவேட்டில் பொருள் உள்ளடக்கப்பட்டிருந்த பக்கத்தில் பதவிநிலை உத்தியோகத்தரின் கையொப்பம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) குறியீட்டு இல 166-1-1-1403 என்ற செலவு விடயத்திற்கான ரூபா 121,000 ஆன நிகர நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது. | அமைச்சருக்கு உத்தியோகப்பூர்வ இல்லம் 2020 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டமையினால் அதற்கான பற்றுச்சீட்டு 2020 ஆம் ஆண்டினுள் செலுத்தலுக்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) செலவு விடயங்கள் மூன்றிற்கான ரூபா 934,000 ஆன நிதியேற்பாடு நி.பி 66 இன் கீழ் முழுமையாக வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | கொரோனா தொற்று நிலைமையின் காரணத்தினால் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் செயற்படுத்த முடியாது போனது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (இ) ஐந்து செலவு விடயங்களுக்கான ரூபா 1,342,000 ஆன நிகர நிதியேற்பாட்டில் 20 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையான அளவு எஞ்சியிருந்தது. | கொரோனா தொற்று நிலைமை காரணத்தினால் அமைச்சு நீண்ட காலம் மூடப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாடு எஞ்சியது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (ஈ) ஐந்து மீண்டெழும் விடயங்களுக்கான ரூபா 4,163,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 19 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் இடையேயான அளவு நி.பி 66 ஊடாக வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்படும் போது நீர் வழங்கல் அமைச்சுக்கு கோரப்பட்ட வரவு செலவு மதீப்பீட்டு பெறுமதி இராஜாங்க அமைச்சுக்கு புதிய | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | | பாதீடாக பெற்றுக் கொடுத்ததினால் நீர் வழங்கல் அமைச்சின் சில செலவு விடயங்களுக்கு நிதியேற்பாடு போதுமானதாக காணப்படவில்லை. | |
| (உ) | ஆறு செலவு விடயங்களுக்காக ரூபா 463.37 மில்லியனான நிகர நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்று, முற்பணம் பெறுவதில் தாமதம் 166-2-5-40-2201 (17) செலவு விடயத்திற்கு தொடர்புடையதாக திட்டமிடப்பட்டிருந்த மத்தியஸ்த நடவடிக்கை தீர்க்கப்படாமையினால் நிதியேற்பாடு எஞ்சியமைக்கு காரணங்களாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (ஊ) | 22 செலவு விடயங்களுக்கான ரூபா 20,072.6 மில்லியன் ஆன நிகர நிதியேற்பாடு 21 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரை எஞ்சியிருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை, சில செயற்திட்டங்களுக்காக வட் வரி விடுவித்தல், திறைச்சேயிரிடமிருந்து முற்பணம் பெறப்படுவதில் தாமதம், செயற்திட்ட பற்றுச்சீட்டு தொடர்பாக பிரச்சனைகள் காரணத்தின் அடிப்படையில் ஏனைய நிதியேற்பாடுகள் எஞ்சின. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (எ) | மீளாய்வாண்டில் அபிவிருத்தி வேலைத்திட்ட செயற்திட்டங்கள் 35 இன் நிகர நிதியேற்பாடு ரூபா 75,179.62 மில்லியனாக காணப்பட்டது. எனினும், அச் செயற்திட்டங்களின் செலவினம் ரூபா 64,891.39 மில்லியன் ஆனதினால் ரூபா 10,288.23 மில்லியன் எஞ்சியிருந்தது. அதன் பிரகாரம் நிகர நிதியேற்பாட்டில் எஞ்சியது 14 சதவிதமாகவிருந்தது. | கொவிட் தொற்று நிலை மற்றும் திறைச்சேரியிடமிருந்து முற்பணம் பெறல் தாமதத்தினால் நிதியேற்பாடு எஞ்சியது. | -மேற்கூறப்பட்டவாறு- |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்பு** | | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **இணங்காமை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமான கோவையின் 751(4) ஆம் நிதிப் பிரமாணம் | களஞ்சியசாலைக்கு பெறப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக பற்றுச்சீட்டு கட்டளை படிவத்தில் குறிப்பிடப்பட்டதன் பின்னர் இருப்பு பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | களஞ்சியசாலைக்கு பொருட்கள் கையேற்கும் போது தொடர்புடைய பதிவேட்டிற்குரிய இலக்கம் மற்றும் பக்க எண் குறிக்கப்பட்டு களஞ்சியசாலை பொறுபதிகாரியின் கையொப்பம் மற்றும் திகதி இடப்படுவதோடு தொடர்புடைய பதிவேட்டில் பொருள் உள்ளடக்கப்பட்டிருந்த பக்கத்தில் பதவிநிலை உத்தியோகத்தரின் கையொப்பம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் களஞ்சியசாலைக்கு பெறப்படும் பொருட்கள், பற்றுச்சீட்டு கட்டளை படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (1) ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சு பதவியணியினர் சேவை நிலையத்திற்கு வருகை மற்றும் வெளியேறல் கைரேகை அடையாளமிடும் இயந்திரத்தினூடாக உறுதி செய்யப்பட வேண்டினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையில் கைரேகை இயந்திரம் பயன்படுத்தல் கடினமானது என அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரினால் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 2019 யூன் 27 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கை | நிகழ்கால சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உடன்பட வேண்டியிருப்பினும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்குரிய 25 உத்தியோகத்தர்கள் இடமாற்றப்படாது தொடர்ச்சியாக கடமையாற்றியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | இடமாற்றல் செயன்முறை நிகழ்காலத்தில் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதுள்ளது. | ஒருங்கிணைந்த சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றல் குறித்த காலத்தில் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். |
| (iii) 2020 செப்தெம்பர் 21 ஆம் திகதிய 13/2020, 14/2020, 15/2020 மற்றும் 17/2020 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கைகள் | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இடமாற்றப்படாது கடமையாற்றும் ஐந்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டு இறுதியிலும் அமைச்சில் கடமையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இடமாற்றல் செயன்முறை நிகழ்காலத்தில் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதுள்ளது. | ஒருங்கிணைந்த சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றல் குறித்த காலத்தில் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அமைச்சின் வாகனங்களுக்கான எரிப்பொருள் பயன்பாடு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் தொகுதிக்குரிய வாகனங்களின் எரிப்பொருள் பயன்பாடு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனங்களின் எரிப்பொருள் பரிசோதனை மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) **அரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| (i) 2015 யூலை 01 திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09(அ) பந்தி | வாகனங்களின் உரித்துரிமை நிறுவனத்திற்கு கையகப்படுத்தாது 04 வாகனங்கள் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவ்வப்போது நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களில் கையளிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் அமைச்சின் பெயர் மாற்றப்பட்டதன் காரணத்தினால் அச் சந்தர்ப்பத்தில் அமைச்சின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் அகற்றல் தொடர்பாக அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் | | | |
| • 3.1.4.ஆம் பந்தி | 2019 ஆம் ஆண்டில் பௌதீக பொருள் ஆய்வின் போது அடையாளப்படுத்தப்பட்ட பற்றாக்குறை, மிகை தொடர்பாக தேவையான | 2019 பௌதீக பொருள் ஆய்வின் போது அடையாளப்படுத்தப்பட்ட பற்றாக்குறை/மிகை 2020 பௌதீக பொருள் | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆய்விற்கு முன்னர் சமப்படுத்தப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும்.. |
| • 3.1.5. ஆம் பந்தி | பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக அனைத்து நிதி ஆண்டிலும் பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் 2019 பௌதீக பொருள் ஆய்வில் அடையாளப்படுத்தப்பட்ட ஏலம் செய்ய வேண்டிய மற்றும் அகற்றப்பட வேண்டிய பொருட்களுக்காக அவ் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | கொரேனா தொற்று நிலை காரணத்தினால் 2019 பௌதீக பொருள் ஆய்வின் போது அடையாளப்படுவத்தப்பட்ட, ஏலம் செய்யப்பட வேண்டிய மற்றும் அகற்றப்பட வேண்டிய பொருட்களுக்காக தொடர்புடைய ஏலம் தாமதமாகி 2020 செப்தெம்பர் 18 ஆம் திகதி நடத்துவதற்கு நேர்ந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு சனவரி தொடக்கம் நவம்பர் வரை 13 சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு பணிகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 141,010 ஆன முற்பணம் தீர்க்கப்படும் போது 07 நாட்கள் தொடக்கம் 03 மாதங்கள் 04 நாட்கள் வரையான கால வீச்சிலான தாமதம் காணக்கூடியதாக இருந்தது. | எதிர்காலத்தில் தாமதமின்றி முற்பணம் தீர்ப்பதற்கும் பதிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் | பணி நிறைவடைந்தவுடனே முற்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

**------------------------------**

3.1 **திட்டமிடல்**

**----------------**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்**<br>**-----------------------------------** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**<br>**--------------------------------** | **பரிந்துரைகள்**<br>------------------- |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக காலாண்டு அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும், அச் சுற்றறிக்கையின் பந்தி 3 இன் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான வருடாந்த பெறுகை திட்டமொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல்நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட ஒட்டுமொத்த முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் முழுமையான பூரணப்படுத்தாமையை ஏற்றுக் கொள்கின்றேன். | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாரிய அளவிலான நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு செய்திட்டங்கள் 11 தொடர்பாக, 2020 இறுதி காலாண்டு செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் அடையப்படுப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்று நிலைமை, நீர் மூலகங்கள் மாற்றுவதற்கு நேரிடல், காணிகள் தொடர்பான பொது மக்களின் எதிர்ப்பு, டென்டர் அழைத்தலிலான தாமதம், நில அகழ்தல் சிரமங்கள் மற்றும் ட்ரோன ஆய்வு நடவடிக்கைகள் தடைசெய்தல் போன்ற காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் அடையப்படவில்லை | ஆண்டு ஆரம்பத்தின் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் தொடர்புடைய செயற்திட்ட முன்னேற்றங்களினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் நேரடியாக செயற்படுத்தப்பட்ட மற்றும் மீளாய்வாண்டினுள் நிறைவு செய்யவேண்டியிருந்த 07 செயற்திட்டங்கள் ஆண்டு இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தது. | திறைச்சேரியிடமிருந்து முற்பணம் முறையாக கிடைக்கப் பெறாமை, காணி பிரச்சனைகள், கொவிட் 19 நிலை இவ் செயற்திட்டங்கள் தாமதத்திற்கு காரணங்களாக காணப்பட்டன. | ஆண்டு ஆரம்பத்தின் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் தொடர்புடைய செயற்திட்ட முன்னேற்றங்களினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறுநீரக நோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் மொணராகலை மாவட்டத்தலி நீர் தொடர்புகள் பெற்றுக் கொடுக்கும் செயற்திட்டத்தினுள் 650 நீர் தொடர்புகள் பெற்றுக் கொடுப்பதற்கு குறிக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் 165 தொடர்புகள் மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் அச் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 1,033,826 ஆன தொகை தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தாது 2020 ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | பரிந்துரைக்கப்பட்ட குறைந்த வருமாம் ஈட்டுவோர் பெயர் பட்டியலின் பிரகாரம் 880 வாடிக்கையாளர்களுக்காக புதிய நீர் வழங்கல் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக தேவையான நிதியேற்பாடு மொணராகலை மாவட்ட செயலாளரின் ஊடாக நீர் வழங்கல் சபைக்கு பெறப்பட்டது. அதனால் அமைச்சில் எஞ்சியிருந்த ரூபா 1,033,826 ஆன தொகை ஆண்டு இறுதியில் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டது. | செய்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மண்டல பங்குதாரர்களின் பங்கேற்றலுடன் விரைவான செயல்பாட்டு கல்வி வேலைத் திட்டமொன்றிற்காக 2019 ஆம் ஆண்டில் பொது வைப்பு கணக்கில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 337,050 மற்றும் ரூபா 159,109 ஆன தொகை தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தப்படாது 2020 ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | இவ் வேலைத் திட்டத்தின் அனைத்து ஒழுங்கமைத்தல் நடவடிக்கைகளும் அமைச்சின் அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அக் காரணத்தினால் இதற்காக செலவிடப்படக்கூடுமென எதிர்பார்த்த தொகை எஞ்சியது. | நிபி 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்கூறப்பட்ட விடயத்திற்காக 2019 ஆம் ஆண்டில் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,065,500 ஆன தொகையில் தொடர்புடைய குறிக்கோலில் விலகி நீர் தாங்கிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,048,593 செலவிடப்பட்டிருந்தது. | இவ் நிதியேற்பாட்டின் ஊடாக கொவிட் 19 பரவல் குறைப்பதற்காக பாடசாலைகளுக்கு நீர் தாங்கிகள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயற்திட்டங்களுக்காக பெறப்பட்டுள்ள நிதியேற்பாடுகள் வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படக் கூடாது. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் கற்கைநெறிகள் நடத்துவதற்காக பெறப்பட்ட ரூபா 100,000 ஆன தொகை அப் பணிக்காக பயன்படுத்தாமையினால் 2020 ஆம் ஆண்டின் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | நிபி 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | -------------------------------- | -------------------------------- | ----------- |
| (அ) | ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றல், காணி தீர்ப்பதில் தாமதம், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், சுற்றுச்சூழல் மற்றும் மீள்குடியேற்ற தாமதங்கள் போன்ற விடயங்களினால் அமைச்சின் நேரடி கணக்காணிப்பிற்கு கீழான வெளிநாட்டு மூலதன செயற்திட்டங்கள் 12 நிறைவு செய்யும் காலம் கடந்து ஒப்பந்த நீடிப்பு பெற்றுக் | சட்டரீதியான பிரச்சனைகள், குழாய் இடுவதற்கு தொடர்புடைய அகழ்தல் நடவடிக்கைகளின் போது அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் போது முகங்கொடுக்க நேர்ந்த தாமதங்கள், காணி கையகப்படுத்தல் தாமதங்கள், ஒப்பந்தங்கள் வழங்கல் தாமதம், | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அக் காரணத்தினால் அச் செயற்திட்டம் நிறைவு செய்யும் காலம் 82 நாட்கள் தொடக்கம் 1460 நாட்கள் வரையான கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தாமதமொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தக்காரரின் செயலாற்றல் பிரச்சனைகள், எதிர்பார்க்காத வண்ணமான கடின பாறைகளை கண்டறிதல், மோசமான காலநிலை, பாஸ்கு தாக்குதல் மற்றும் கொவிட் 19 காரணங்களினால் தாமதம் ஏற்பட்டிருந்தன. | |
| (ஆ) | சிறிய அளவிலான செயற்திட்டமான அந்தரகஸ்யாய செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் 2020 திசெம்பர் 31 இற்கு 245 நாட்கள் தாமதத்தின் பின்னரும் செயற்திட்டம் நிறைவு செய்வதில் தோல்வி கண்டிருந்தது. | திறைச்சேரியிடமிருந்து முற்பணம் பெறப்படாமை மற்றும் கொவிட் 19 நிலை செயற்திட்டத்தில் தாக்கமளித்தல் காரணத்தினால் செயற்திட்டம் தாமதமாகியது. | -மேற்கூறப்பட்டவாறு- |

**3.5 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட 2020 திசெம்பர் 31 இற்கு நிறைவு செய்வதற்கு வேண்டி காணப்பட்ட திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் திருகோணமலை நீர் வழங்கல் செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நிறைவு செய்வதறகு முடியாதிருந்தது. | திறைச்சேரியிடமிருந்து முற்பணம் பெறப்படாமை மற்றும் கொவிட் 19 பரவல் தாக்கத்தின் அடிப்படையில் தாமதமாகியது. | செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(அ) <u>அங்கீகாரமின்றி வாகனங்கள் பயன்படுத்துதல்</u>**<br>அரச செலவின முகாமைத்துவத்திற்குரிய 2010 மே 14 திகதிய சீஏ /1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக கடிதத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சரினால் பயன்படுத்தப்படுகின்ற நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குரிய CBG-7786 இலக்க வாகனத்திற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் இந்த வாகனம் அமைச்சின் பயன்பாட்டிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சனாதிபதி அலுவலக ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(ஆ) <u>வேறு அரச நிறுவனத்திற்குரிய வாகனங்கள் பயன்படுத்தல்</u>**<br>வேறு அரச நிறுவனங்கள் 7 இற்கு சொந்தமான 13 வாகனங்கள் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | மீண்டும் வாகனங்கள் பெற்றுக் கொடுப்பதற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படும் வரையில் இந்த வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு ஏற்பட்டுள்ளது. | வேறு அரச நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் பயன்படுத்தும் போது அவை முறையாக கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) <u>பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத</u>** | | |

| | | | |
|---|---|---|---|
| | **வாகனங்கள்**<br>கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்கள் மற்றும் கள ஆய்வின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ஐந்து வாகனங்கள் அமைச்சின் வளாகத்தில் மேலுறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்கள் பழுதுபார்க்கவோ அகற்றுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரு வாகனங்களுக்குரிய முழுமையான எஞ்சின் பழுதுபார்த்தலுக்காக பொறியியலாளர் அறிக்கை அழைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மற்றைய இரு வாகனங்கள் பழுதுபார்த்தலுக்காக நிதி அமைச்சிடமிருந்து நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளன. | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வாகனங்கள் பழுதுபார்த்தலுக்காக அல்லது ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | **வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வாகனங்கள்**<br>நீர் வழங்கல் அமைச்சினால் 2019 மே 08 திகதியிலிருந்து WP KB-2442 இலக்க வாகனம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு செயற்திட்டத்திற்கும், WP GX-4230 ஆம் இலக்க மற்றும் WP GX-4232 ஆம் இலக்க வாகனங்கள் 02, 2020 ஆகஸ்ட் 25 ஆம் திகதியிலிருந்து தேசிய சமூக நீர் வழங்கும் திணைக்களத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்தது. | வாகன தேவைப்பாடுகளின் அடிப்படையில் இரு நிறுவனங்களுக்காகவும் செயலாளரின் அங்கீகாரத்துடன் அவ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. | வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வாகனங்கள் மீண்டும் பெறப்படுவதற்கு அல்லது அவை முறையாக விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | **வாகனங்கள் பழுதுபார்த்தல்**<br>KS-8966 ஆம் இலக்க வாகனம் பழுதுபார்த்தல் நடவடிக்கைக்காக 2020 சனவாரி மாதத்தில் வெளி நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு வாகனம் நிறுவனத்திற்கு கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலை காரணத்தினால் மற்றும் நிதியேற்பாடுகள் காணப்படாமையினால் பழுதுபார்த்தல் தாமதமாகியதுடன் தற்போது பழுதுபார்த்தலுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சிற்கு கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் 128(1) மற்றும் 1999 ஏப்ரல் 09 திகதிய 1/99 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 ஆம் பந்திகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு கட்டுப்பட்ட உத்தியோகத்தர்கள் அப்போது செல்லுப்படியாகும் சட்டம் மற்றும் ஒழுங்குகளின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தி பிணை வைப்பு செய்வதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பிணை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொளள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணை பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| இருந்த இராஜாங்க அமைச்சர் இவ் அமைச்சிற்கு நியமம் பெற்று வருகையில் கொண்டுவரப்பட்ட குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனத்திற்காக அவ் வாகனம் வழங்கிய நிறுவனத்துடன் அமைச்சின் செயலாளரினால் புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உட்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய | இவ் வாகனம் 2020 சனவரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை பெற்றுக் கொடுப்பதற்காக உத்தியோகத்தரொருவர் இல்லாமையின் காரணத்தினால் அது பொது சேர்மத்தில் ஓட்ட செயற்பாடுகளுக்காக | சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர் மீண்டும் இடமாற்றப்பட்டதன் பின்னர் அவ்வாகனம் 2020 சனவாரி தொடக்கம் ஏப்ரல் வரை பயனற்று இருந்தமையினால் அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 837,772 ஆன வாடகை செலவினம் அமைச்சிற்கு மேலதிக செலவின பாரமாயிருந்தது. | பயன்படுத்தியதுடன் 2021 திசெம்பருடன் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட குறிக்கப்பட்டுள்ளது. |

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் ---------------------------------- | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை -------------------------------- | பரிந்துரைகள் ------------------- |
|---|---|---|
| (அ) அமைச்சின் பதவியணியில், அரச ஊழிய சேமலாப நிதியத்திற்காக ஊழியர்களிடமிருந்து மற்றும் நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற தொகை விரைவாக தொடர்புடைய நிறுவனத்திற்கு அனுப்பப்ப வேண்டியிருப்பினும், 2019 திசெம்பர் தொடக்கம் 2020 திசெம்பர் வரை 5 சந்தர்ப்பங்களின் போது ஊழிய சேமலாப நிதிய பங்களிப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 837,351 தாமதமாகி பரிமாற்றப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றின் காரணத்தினால் தாமதமொன்று ஏற்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் தாமதமின்றி பரிமாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியான கொடுப்பனவுகள் விரைவாக தொடர்படைய நிறுவனத்திற்கு மாற்றப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டில் வாகன ஏலத்திற்கு முன்வைக்கப்பட்ட KB-6850 மற்றும் KB-2477 இலக்க இரு வாகனங்களுக்காக கூடிய விலைகள் முன்வைத்த டென்டர்காரர்கள் அந்த வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நிராகரித்த பின்னர் மீண்டும் டென்டர் அழைக்கப்பட்டு | இரண்டாம் டென்டர்காரர்களுக்கு அவ் வாகனங்கள் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளாதது, முதலாம் மற்றும் இரண்டாம் டென்டர்காரர்கள் கலந்துரையாடி விலை | மீண்டும் டென்டர் அழைத்து விரைவாக ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அமைச்சின் வளாகத்தில் அவ் வாகனங்கள் 2021 மே 20 ஆம் திகதி வரையிலும் நிறுத்தப்பட்டிருந்தது. | குறைவாக வாகனங்கள் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்றமை தொடர்பாக பெறப்பட்ட தகவலின் காரணத்தினாலாகும். | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ----------------------- | ---------------------------------- | ----------- |
| (அ) | நீர் வழங்கல் அமைச்சின் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களாக 2030 இல் அனைவருக்கும் எதிர்பார்க்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வகதிகள் உறுதி செய்தல் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் நோக்கம் அடையப்படுவதற்காக ஆறு பிரதான செயலாற்றல் குறிக்கோள்களின் (KPI) பிரகாரம் முன்னேற்றம் அளவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட குடிநீர் பெற்றுக் கொடுத்தலின் கீழ பாதுகாப்பான குடிநீர் பெற்றுக் கொடுத்தலின் போது அதன் தரம் உறுதி செய்யப்படுவதற்காக போதுமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குடிநீரின் தரம் உறுதி செய்வதற்காக 25 மாவட்டங்களும் உள்ளடக்கபட்டும் விதத்தில் கிராமிய நீர் வழங்கல் முறை, குழாய் கிணறு மற்றும் அகழப்பட்ட கிணறுகளின் நீரின் தரம் பரிசோதித்தல் வேலைத்திட்டமொன்று செயறபடுத்தப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் 81947 நீர் மாதிரிகளள் பரிசோதிக்கப்பட்டுள்ளது. | பாதுகாப்பான குடிநீர் பெற்றுக் கொடுத்தல் உறுதி செய்யப்படுவதற்காக போதுமான நீர் மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் எம்எஸ்டிடப் /8/65 இலக்க 2018 ஏப்ரல் 27 திகதிய நிலைப்பேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு சுற்றறிக்கை | அதற்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு பணிப்பாளர் நாயகம், நிலைப்பேறான | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்படுவதற்கு ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி குழுவிற்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | |

## 5. மனித வள முகாமைத்துவம்.

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாரான பதவியணியினர் மற்றும் ஊழியர் சம்பளத்திற்கான செலவினம்** | | |
| (i) நிறுவனத்தின் ஒட்டுமொத்த வெற்றிட எண்ணிக்கை 30 ஆக காணப்பட்டதுடன் அதனுள் சிரேஸ்ட மட்ட பதவிகள் 09, மூன்றாம் நிலை பதவிகள் 03 மற்றும் இரண்டாம் நிலை பதவிகள் 12 மற்றும் முதன்மை நிலை பதவிகள் 06 காணப்பட்டன. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) அரச செலவின முகாமைத்துவம் என்ற தலைப்பிலான 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 இலக்கமுடைய சனாதிபதி அலுவலக கடிதத்தின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூறப்பட்டுள்ள பதவிகளுக்காக சாதாரண அல்லது ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படமேயானால், அவர்கள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட இணைத்தல் | அமைச்சரின் விருப்பத்தின் பெயரில் நியமனம் மேற்கொள்ளப்படுகின்றமையினால் தொடர்புடைய தகுதிகள் பரிசோதிப்பது நடைமுறையானதல்ல. | சனாதிபதி அலுவல ஆலோசனை பிரகாரம் ஊழியர்கள் சாதாரண அல்லது ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படுமேயானால் அவர்கள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின் தகுதிகள் பூர்த்தி செய்துள்ளமை உறுதி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையின் தகுதிகளை பூர்த்தி செய்திருக்கப்பட வேண்டும். எனினும் அமைச்சின் பதவியணியில் இணைக்கப்பட்டிருந்த 04 பதவிகளுக்கு தொடர்புடைய 10 ஊழியர்கள் குறித்த தகுதிகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளமைக்கு தொடர்புடைய சாட்சிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | | |
| **(ஆ)** | **வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மனித வளங்கல்** | | |
| | (i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 05 பதவிகளுக்கு சொந்தமான 17 ஊழியர்கள் மீளாய்வாண்டில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அமைச்சினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து 08 பதவிகளுக்குரிய 15 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவ் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக 2020 திசெம்பர் 31 வரை ரூபா 37,988,182 சம்பளங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | மாண்புமிகு நீர் வழங்கல் அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சரின் பதவியணியினருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. | வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனிதவளம் தொடர்புடைய நிறுவனத்திற்கு மீண்டும் விடுவிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) 2012 ஆம் ஆண்டிலிருந்து நீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர்களின் சேவை அமைச்சுக்கு பெறப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் அமைச்சில் சேவை புரியும் உத்தியோகத்தர்களில் இருவர் அவ் உத்தியோகத்தர்களின் நிரந்தர பதவிக்கு வெளியே அமைச்சின் இரு பதவியில் சேவை புரிகின்றமை அவதானிக்கப்பட்டது. | அவ் உத்தியோகத்தர்கள் இருவரும் முறையாக பெறுகை பிரிவு மற்றும் ஊடக பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ளனர். | -மேற்கூறப்பட்டவாறு- |
| (iii) நீர் வழங்கல் அமைச்சின் 07 ஓட்டுனர்கள் அமைச்சில் கடமையாற்றப்படுவதுடன் அதன் பிரகாரம் ஒட்டுமொத்த ஓட்டுனர்கள் 16 ஆனதினால் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டுனர் எண்ணிக்கையை விஞ்சி இரு ஓட்டுனர்கள் கடமையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | மாண்புமிகு நீர் வழங்கல் அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சரின் பதவியணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை விஞ்சாது காணப்படல் வேண்டும். மற்றும் வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனிதவளங்கள் தொடர்புடைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படல் வேண்டும். |